# நிலாச்சோறு



கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாச்சோறு

கவிஞர்
ரஜிதா அரிச்சந்திரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | நிலாச்சோறு |
| ஆசிரியர் | : | கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன் |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | 2023 ஜனவரி |
| பக்கங்கள் | : | iv +64 |
| அளவு | : | B6 |
| ISBN | : | 978-624-98909-2-3 |
| பதிப்பு | : | மெகா பதிப்பகம் 021 221 7939 |

| | | |
|---|---|---|
| **Title** | : | Nilachooru.. |
| **Author** | : | Rajitha Arichandiran |
| **Copy Rights** | : | Author |
| **Pages** | : | vii + 64 |
| **Price** | : | Rs.500 |
| **Print** | : | January, 2023 |
| **Contact** | : | No.110, New Senkuntha Road,<br>Thirunelvely East, Jaffna.<br>Mobile No: +94777925326 |
| ISBN | : | 978-624-98909-2-3 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

சித்திரமாய் என்னைச் செதுக்கிய சிற்பியே
பத்திரமாய் வளர்த்து படிக்கவே வைத்து
வரலாற்றை சொல்லியே தந்தென்னை கூரிய
அரமாய் உருவாக்கி னாய்
என்னுடைய தந்தையும் தாயுமான தாத்தாநீ
அன்புக் குருவாய் குவலயத்தில் இன்பமாய்
அள்ளி எடுத்தணைத்து வல்லமை ஊட்டி
உள்ளம் மகிழவளர்த் தாய்
ஆளாக்கி என்னையா ளானபின் ஐயாநீ
கேளாதே சென்றாயே சத்தமின்றி மெய்துறந்து
சித்த வைத்திய சித்தன் முருகனின்
பக்தன் சமர்ப்பணமு னக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை



"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல்" எனப்பாடிய பாரதியின் வழியில் நாளும் பொழுதும் கவிதையினை நேசித்தும் அதனையே சுவாசித்தும் வாழ்க்கை நடத்துகின்றேன். அந்தவகையிலும் நானும் இந்த சமூக விலங்களில் ஒருத்தி என்ற வகையிலும் தினமும் பார்க்கும் கேட்கும் அகப் புற வாழ்வின் அம்சங்களை பாடு பொருளாக்கி அதனை ஆசியப்பா,வெண்பா போன்ற பாக்களாலும் ஆசிய ஒத்தாழிசை,விருத்தங்களாலும் என்கற்பனை கலந்து படைத்துள்ளேன.

ஈழுத்து மகாகவி உருத்திரமூர்த்தி அவர்கள்"காற்றை மலையை மறவுங்கள் சமூகப்பிரச்சினைகளை பாடு பொருளாக்குங்கள் என் கூறியமைக்கமைவாக சமூகத்தில் புரையோடிப்போயுள்ள பிரச்சனைகளை பழைய பாவினங்களுக்குள் புதுமைக் கருத்துக்களை புகுத்தி எழுதியுள்ளேன். சமூகத்தைப் புரட்டிப்போட கூடிய பல சிக்கல்கள் பாடு பொருளாக்கி கவிதை வடித்துள்ளேன்.

ஒவ்வொரு படைப்பாளியும் எதிர்பார்ப்பது தன் கருத்தால் சமூகம் மாற வேண்டும் என்பதே அந்தவகையில் என் கவிதைகள் சமூக மாற்றத்திற்கு ஒரு வித்தாக அமையும் என நம்புகிறேன். என்னுடைய முந்தைய படைப்புக்களை ஆதரித்ததைப் போல இப்பனுவலையும் ஆதரித்து ஊக்கமளிக்குமாறு வாசகர்களாகிய உங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்வதுடன். இப்பனுவலை அழகுற அச்சிட்டு தந்த மெகா அச்சகத்திற்கும். அணிந்துரை நல்கிய பேராசிரியர் ம.இரகுநான் அவர்களுக்கும் என்னை ஆதரித்துக் கொண்டிருக்கும் வாசகர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



கவிஞர் ரஜிதா அரிச்சந்திரன் யாழ்ப் பாண பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பட்டத்தினை பெற்று பிரதேச செயலகம் யாழ்ப்பாணத்தில் அபிவிருத்தி உத்தி யோகத்தராக கடமையாற்றி வருகின்றார். இவர் “அக்கினிச்சிறகாய்”(2021), பக்திப் பாசுரங்கள் (2022) முதலான கவிதைப் பனுவல்களையும் சிறுவர் பாடல்கள் இறுவெட்டினையும் பாரம்பரிய உணவுக்கலாசாரம், கிராமிய விளையாட்டுக்கள் ஆகிய பனுவல்களைதொகுத்தும் உள்ளார்.

தற்போது இவர் “நிலாச்சோறு” என்ற தலைப்பில் தனது மற்றுமொரு கவிதைப் பனுவலை வெளியிட முன்வந்துள்ளார்.

ரஜிதாவின் வார்த்தைகள் உரைநடைக்குரிய தன்மையை மீறியவை . எதுகைகளும் மோனைகளும் பொருந்தி வருதலால் கவிதைக்குரிய தன்மை பெற்று மரபினை காட்டுகின்றன. இந்தப் பனுவலில் இவர் தமிழின் இனிமையை கூற ஆரம்பித்து அன்பு, மழலை, இயற்கை, தந்தை, தாய்ப்பாசம், காதல், வாழ்க்கை, போதை, கலாசாரம், மனித இயல்பு போன்ற தலைப்புக்களில் தனது மன உணர்வுகளுக்கு வார்த்தைகளால் வடிவம் கொடுத்துள்ளார். உணர்வுகளுக்கு வார்த்தைகளால் வடிவம் கொடுக்கும் போதே அது இலக்கியமாக உருக்கொள்ளும் அவ்வாறு உருக்கொள்ளும் படைப்புக்களில் காலத்தை வென்று நிற்பவை சிலகால வெள்ளத்தில் அடிபட்டு போகிறவை பல. காலத்தால் அழியாத கவிதைகள் பலவற்றை சுமந்து நிற்கின்ற தமிழன்னை யின் பாதங்களில் சமர்ப்பிக்கப் படுகின்ற கவிதைப் பூக்களில் ரஜிதா அரிச்சந்திரனின் கவிதைப் பூக்களும் தனது பங்கை எடுத்துக்கொள்ளும். காலம் இதற்கான அங்கீகாரத்தை வழங்கும் அதுவரை காத்திருந்து மென்மேலும் படைப்புகளை உருவாக்க வேண்டும் என்று பாராட்டி வாழ்த்துவதில் மகிழ்வடைகின்றேன்.

**பேராசிரியர் ம.இரகுநாதன்,**
தலைவர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழுக்குள்


- தமிழின் இனிமை
- முத்தமிழை வணங்கித் தொழுவோம்
- பிள்ளைக்கனியமுதே
- கண்களும் கவிதை பேசிடும்
- அன்பு
- அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
- அடியிலே பெருக்கெடுத்து ஆடியும்....
- நினைவுகளின் சுகந்தம்
- சுகம்தருமோ சுதந்திரம்
- பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பிடுவாய்
- இதயக்கூட்டின் விம்பங்கள்
- இயற்கையே இன்பம்
- தந்தை
- பேரன்பின் பெருவெளி
- அறிவினை விருத்தி செய்
- வாழ்வெனும் வானவில்
- காதலி
- வாழ்க்கை
- நீதானே
- வேடதாரிகள்
- தேடல்
- நீதி
- நெஞ்சுபொறுக்குதில்லை
- நேர்மை
- ஆசை
- துரோகம் துரத்து
- தம்பதியர் தினம்
- மாற்றிடு அப்பனே
- சுற்றுச்சூழல் காப்போம்
- நிலாச்சோறு
- வாழும் வரை போராடு
- விடியலைத்தேடி
- பெண்ணென்ன
- பேதைக்கு நீதி
- காதல் நினைவு
- அற்பர்
- போதை
- காலைக் காட்சி
- மாணவர்களுக்கு
- புதிதாய்ப்பிறப்போம்
- பாரதிதாசன்
- மனித உரிமை போற்றுவோம்
- மழை
- விலையேற்றம்
- நோக்கும் திசையெங்கும் பாரதி
- நிலையாமை
- பெண்ணெனும் பெருஞ்சுடர்
- மகளென்னும் தாய்
- அற்ப நரர் நாம்
- மலர்
- அச்சமில்லை அச்சமில்லை
- மெத்தப் படித்தவன்
- கலாசாரம்
- தடுப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் இனிமை

இனிய ஓசை இதமாய் வருட
கனிந்த கனியின் கனிவாய்ப் பேசுகிற
மாந்தர்க்கு இனிக்கும் மரகத மொழியே
காந்தம் போலாய் கவரும் தமிழே
தேனாய் நாக்கில் தெவிட்டா இனிப்பை
மானாய்த் தருகிற மரகதப் பெண்ணே
ஓடும் ஆறாய் ஓங்கிச் செல்வாய்
நீடு வாழ்ந்தே நித்திலம் மீதே
வல்லினம் இடையினம் வகையாய்த் தந்தே
மெல்லினம் இணையாய் மெல்லிதழ் சேரவே
எதுகை மோனை எடுப்பாய்க் காட்டி
மெதுவாய்த் தொடங்கி மேதினி மேலே
இதமாய்க் காட்டும் இன்பத் தமிழே
அழகில் நீயே அவனியை வென்றே
குழந்தைகள் பேசும் குட்டித் தேவதை
வயதும் ஏறியே வளமை இளமை
இயல்பாய் காட்டும் இன்ப சுந்தரியே
மூத்தவள் நீயே மூலமும் நீயே
ஆத்தா வாயே அணைப்பாய் தமிழே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழை வணங்கித் தொழுவோமே

ஆதியாய் எழுந்தவள் எங்குமே நிறைந்தவள்
ஆளும் உலகை ஆண்டாளே
நாதியாய் எம்மையும் நன்றெனக் காத்தாயே
நல்ல கருத்து கொண்டாளே
பாதியாய் பாரிலே உயிரென இலங்குமே
படைத்த பிரம்மா நீயானாய்
மோதியே எழுகிற ஆறெனப் பாய்ந்தவள்
மோகம் தீர்க்கும் தாயானாய்

இலக்கிய வளத்தினை கொத்தென நிறைத்தவள்
இலங்கும் பிறையாய் திகழ்கின்றாய்
திலகமே நீயென திகழுகிற அற்புதம்
திங்கள் நீயாய் ஆகின்றாயே
கலகமே நீக்கியே அமைதியின்
கருத்து விதைத்தாய் அகிலத்தில்
பலமெனத் தோன்றியே பகட்டினை விரட்டியே
பட்டென் றொலித்தாய் கனீரென்றே

தமிழும் இனிமையும் இணைந்ததால் உன்னுடைய
தாளைத் தொழுதோம் தாயேநீ
அமிழ்தமாய் பொழிந்ததால் வந்ததே கிளைகளே
ஆயிர மகிலதில் மாந்தரிடை
கமிழுமே மனத்திலே உலகமே வியக்குமே
கன்னி உன்னால் பாரெல்லாம்
சிமிட்டுமே உன்னுடை கண்ணிலே வருகிற
சிற்பம் போன்ற அசைவாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைக்கனியமுதே

கனியே தேனே என்னுடைய
கண்ணே ஆருயிர் நீதானே
பனியில் பூத்த தாமரையே
பவளம் நீயே மல்லிகையே
மனிதம் வளர்த்தே உலகத்தில்
மங்காப் புகழை பெற்றெடுக்க
புனிதம் ஆகவே புவிமீதில்
புதுமை படைக்கத் தோன்றினாயே

கொஞ்சும் மொழியால் பேசுகின்றாய்
கொண்டை தனையே இழுக்கின்றாய்
கெஞ்சிக் கேட்டேன் முத்தத்தை
கெஞ்ச விட்டே கொல்லுகின்றாய்
மஞ்சம் வந்தால் மடியினிலே
மலராய் சிரிப்பாய் இதழாலே
தஞ்சம் எனவே வந்தேனே
தவழும் குழந்தை உன்னிடமே

வஞ்சி என்னை உலகத்தில்
வடிவாய் ஆக்க உதித்தாயே
பஞ்சம் நீக்கி பாரினையே
பாவால் ஆளவே வந்தனையே
வஞ்சம் எல்லாம் பொடியாகும்
வனப்பு மிக்க உன்னாலே
நஞ்சு கூட அமிர்தமாகும்
நல்ல குழந்தை உன்னாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்களும் கவிதனைப் பேசிடும்

மன்றிலே தேன்மொழி பார்வையால் மொழிந்த
மரகத வார்த்தையால் நானே
என்னுடை மொழியையே மறந்தவ னாகி
எப்படி நடந்தது என்றே
இன்பமே எழுந்துயர் துடைக்கவே வந்தே
இனிமையின் கதவினைத் திறந்தே
கன்னலின் சாற்றினை குடித்தபோ தான
கணத்தினை உணர்ந்துவந் தேனே

இதயத்திலே இனிமையின் சுவட்டினைப் பரப்பி
இரும்பினை உருக்கவே புருவம்
நித்தமும் தூக்கியே பார்த்ததால் கனிந்த
நிலவினை கவனமாய் தினமும்
அதரத்தினை கரங்களால் பிதுக்கியே மெதுவாய்
அகத்தினை திறந்தால் அகனின்
உதரத்தினால் வந்தேகி இருக்கிற உயிரில்
உண்மையின் தீயினால் உருகும்

காதலால் காவியம் ஆனவரின் எதிரில்
காரணம் இன்றியே நீயே
மோதலால் முட்டியே எழுகிறாய் மானே
மோதகம் உண்டதால் நீயும்
சாதலின் பிடியிலே தப்பி ஓடி
சரணமாய் விழுந்தெழுந் துயிரே
ஆதாலால் காதல் பெரியதென் றுலகில்
ஆர்வமாய் அணிதிரள் அன்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதியாய் நீயும் என்னிலே வந்தால்
பரவசம் இரும்புமாய் இருந்த
நாதியில் லாதவன் நானுமாய் மறைந்தே
நங்கையால் பாரிலே உயர்ந்தே
சாதியில் சாத்திரம் பார்க்கா உண்மை
சாதியினை தோற்றுவித் துலகில்
சோதியாய் கண்களால் கவிதையை பேசியே
சொர்க்கமாய் பூமியை மாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

காதல் என்றும் அழிவதில்லை
காற்றும் நெருப்பும் பார்த்தாலே
மோதல் கூடி கூடலாகி
மோனம் கூட்டும் இயல்பிலேயே
சாதல் தவிர்க்கும் மருந்தாகி
சமயம் வருகின் றபோழ்தினிலே
சாத னையையே புரியவைக்கும்
சத்தி யமான உணர்வாகி

பார்க்கும் போதில் மட்டுமன்றி
பார்க்கா விடத்தும் உள்ளுக்குள்
ஆர்ப்ப ரித்தே எழுகின்ற
ஆறாய் இருக்கும் அன்பினாலே
பார்பார்த் தேயும் அளவிற்கே
பரிந்து தாக்கும் அற்புதமே
தர்க்கம் புரியா உண்மையான
தாக்கம் மனதில் விளைவிக்கும்

ஆணும் பெண்ணும் பார்க்கையிலே
அவயம் சிதறும் உன்னாலேயே
வேணும் வேணும் வீணையாக
வேட்கை தீரும் வரையிலேயே
காணும் போதில் மட்டுமல்ல
காலம் முழுதும் அன்பிலேதான்
நானும் மறையும் அளவிலேயே
நாடி உன்னைத் தேடுமுள்ளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்தே உயரப் பறக்கவுமே
தொட்டுத் தொட்டு பார்க்கவுமே
அடர்ந்த காட்டில் தனியாக
அசையும் போதில் கூடவேநீ
படர்ந்தே நெஞ்சில் பரவியுள்ளாய்
பாவை உந்தன் கண்ணசைவு
கடந்தே செல்லும் போதினிலே
கவலை தொலைந்து போகும்தான்

உயிரை மாய்க்கும் எண்ணங்கள்
உள்ளம் கடந்தே வெளியேறும்
பயிராய் வளர்ந்தே பாரிற்கே
பயனைக் கொடுக்க உதவியையே
அயிற்றுப் பலமாய் கொண்டுவந்தே
அழகி உன்னின் விழிஅம்பு
கயிறாய்த் திரித்தே எழும்நெஞ்சே
கட்ட ழகியின் இதயத்தில்

காலம் முழுக்க வாழுகின்ற
காதல் எம்மை வாழ வைக்கும்
ஆலம் விதையில் கூடத்தான்
ஆற்றல் காணும் காதலாலே
பாலம் போடும் அறிவினையே
பாவை நீயே தந்தருள்வாய்
ஓலம் மிகுந்த உலகிலேயே
ஓங்கும் அன்பு உயர்ந்திடுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

மனதை விடவும் உயர்ந்த எதுவும்
மண்ணில் இல்லை என்றுணர்ந்த
கனவில் வாழா புத்தி பெற்ற
கனவான் உலகில் சிறந்ததையே
நனவில் வாழும் போதே உணர்ந்தெழுந்தே
நல்ல தவத்தை இயற்றியதால்
நனவில் வாழ்ந்து சிறந்து செழித்தே
தழைத்தே ஓங்கும் மரமாவோம்

அகத்தில் உள்ள பலவும் காட்டும்
அருமை ஆன கண்ணாடி
முகமே எனவே உணர்ந்த முன்னோர்
முதலில் கூறியே வைத்தனரே
தகரம் எனவே தட்டித் திரியும்
தரணி போற்றும் மக்களே
சிகரம் நீவிர் தொடவே தேவை
சிட்டாய்ப் பறக்கும் அகத்தினையே

படிக்கும் இயல்பை இலகெனவே
பயின்றே வளர்த்து பாரிற்கே
இடித்தே உரைக்கும் வரையான
இன்பம் யாவும் மனிதர்க்கே
படிந்த தெனவே யாரும் இயல்பாய்
பயின்றே தீமை புரிபவர்கள்
கடிந்தே வாழ பழகி வாழும்
காலம் முழுதும் சிறந்திடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலில் நீராய்க் கலந்துள்ள
பலதும் உலகில்  நிறைந்துள்ள
கேலி புரியும் கசடுள்ள
கெழியர் நிறைந்த உலகிலேயே
ஆலில் அமர்ந்த குருவிபோலே
ஆற்றல் மிக்க அனைவருமே
சீலி ஆகி தீயதினை
சீண்டித் துரத்தி வாழலாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடியிலே பெருக்கெடுத்தே ஆடியும் ஓடியும் வா

மாதங்கள் பன்னிரண்டில் அற்புதமே ஆடியேநீ
மங்கலத்தின் ஆரம்பம் உன்னில்
ஆதங்கம் பலவற்றினைத் தீர்க்கவந்தாய் ஆடியேநீ
ஆறாயே பெருக்கெடுத்தே வந்தாய்
பாதங்கள் நோகாமல் விதைக்குமாறு ஆடியேநீ
பாங்காயே வந்தாயே மண்ணில்
ஊதக்காற் றாகியெழுந் தேவந்தாய் ஆடியேநீ
உண்மையை விதைக்கவே வந்தோம்

வண்டெல்லாம் சேமிக்குமாறு அறுவடையை ஆடிநீயே
ஆனந்தம் தந்தெம்மை காப்பாய்
வண்ணமான மலர்களெல்லாம் மலர்ந்தெழவே ஆடியேநீ
வடிவாகி வந்தாயே தாயாய்
திண்ணமாக நினைந்தோமே என்றாலே ஆடிநீயே
தீர்க்கமான தாயாயே எம்மை
தண்மையுடன் காத்தருளி உணவெல்லாம் ஆடிநீயே
தந்தருளியே காத்தாயே ஊரில்

நீரினையே பெருக்கியதால் நித்திலமே ஆடிநீயே
நீந்தியேகி வருவாயே காத்தே
தாரினையே சூட்டத்தான் மலருடனே ஆடிநீயே
தருகின்ற குளிர்ச்சியினைப் பெற்றே
தேரிலேயே எழுகின்ற பகலவனாய் ஆடிநீயே
தேடப்பட் டுலகிலேயே பூத்தாய்
பாரினது இயக்கத்தின் ஆதாரம் ஆடிநீயே
பட்டமாயே சிறந்தாய் ஆண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையும் தருகின்ற அம்சமான ஆடிநீயே
அருளாயே தந்தனையே எல்லாம்
இத்தனையும் உன்னுடைய கரத்தினால் ஆடியேநீ
இணக்கமாயே வழங்கிவந்தே பாரில்
எத்தனையோ ஆண்டுகளாய் பூமியில் ஆடியேநீ
எவ்வளவு உன்னதமாய் தந்தாய்
மத்தினையே போலாகி பாற்கடலை ஆடியேநீ
மறக்காமலே தருகின்றாய் எங்கும்

அம்மனாயே உன்னையேநாம் அர்ச்சித்தே வணங்கின்றோம்
அகிலத்தில் ஆதலாலே அம்மன்
எம்குறையைத் தீர்க்கத்தான் வந்தருளி பூமியில்
எங்களையும் வாழவைத்து காத்து
இம்சையையே தீர்க்குமென்றே ஆடியிலே ஆத்தாவின்
இனிமையையே பூத்ததிரு நாளாய்
மும்மாரி பொழியுமென்றே கொண்டாடி பாற்குடமே
முயன்றெடுத்தே வந்தோமே ஆத்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளின் சுகந்தம்

இளமைக் காலம் இனிமை அதுவே
வளமை தந்தே வளமாக் கியதே
ஓடித் திரிந்தே ஒழித்துப் பிடித்தே
வாடிப் போகா வாடா மல்லியாய்
எழுச்சி கொண்டே எங்கும் சுற்றி
எழும்பிப் பறக்கும் எந்திரப் பறவையாய்
வானம் முழுதும் வட்ட மிட்டே
மானம் ரோசம் மண்ணும் அறியா
பட்டாம் பூச்சி போலாய் மகிழ்வின்
அட்ட திக்கும் அடித்துப் பறந்தே
இன்பம் கூடி இளமை நட்புக்கள்
அன்பில் வாழ்ந்த அந்தக் காலம்
நெஞ்சில் நின்று நினைவாய் என்னை
வஞ்சம் இல்லா வளமை களாலே
வாழ வைக்கும் வறட்சி அற்ற
தாழா நினைவுகள் தக்கை போட்ட
போத்தலின் வெளியே போகா நீராய்
காத்தல் வேண்டி கணக்காய் வந்தே
என்னுள் அசையாய் எழும்பி எழும்பி
கன்னல்ச் சுவையாய் கனாவில் கூட
வந்து போயே வாசனை தந்தே
செந்தா மரையாய் சொக்க வைக்குதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகம் தருமோ சுதந்திரமே

போராடிப் பெற்றசுதந் திரக்காற்று நீயே
போர்க்களத்தை கடந்ததுமே சுவையிழந்தாய் நீயே
வேராலே இணைந்தமரம் நிலத்திலிருந் துதானே
விடுதலையை கேட்பதைபோன் றுள்ளதே இன்று
ஆராரோ அர்த்தத்தை விளங்காதே கேட்கும்
அடிமைக்கை விலங்கினது உடைப்பாயே உள்ளம்
வேராலே அறுந்தேபோய் பண்பாடே இல்லா
வரண்டதாலே சுதந்திரமே வரண்டேபோய் தேய்ந்தே

சுகத்தினையே தரவேண்டி சுதந்திரமோ வந்தே
சுகத்தினையே தராதேயே சுமையினைக் கூட்டி
அகத்தினையே சிறையாயே ஆக்கிப்போய் பேயாய்
அடக்கி எம்மை இறுக்கிப்பிடித் தடுக்கின்ற பேயாய்
அகத்தினுள் புகுந்தெம்மை அழகிழக்க வைத்தே
அருமந்த வாழ்வையே அழிக்கின்ற போதை
சுகத்தையுமே பெறாதலைகின் றோமேநாம் இன்றும்
சுத்தமாயே பயனில்லை சுதந்திரத்தா லின்று

அத்தனையும் வேசம்தான் ஆருக்கும் இங்கே
அவரவரே கொண்டதுதான் அகிலத்தில் செய்தார்
எத்தனையோ பெரியோர்கள் எங்கிருந்தும் வந்தே
எங்களையே திருத்தத்தான் ஏணிப்படியாய் நின்றே
சத்தமாயே கூறினார்கள் சான்றோரே ஆனால்
சண்டாளர் கேளாரே செகத்தில் தானே
சத்தியமாய் சுதந்திரத்தால் சாக்கடைகள் மேலும்
சரித்திரத்தில் நிறைந்துள்ள சத்தியத்தை தாக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தலத்தில் நிறையப்பேர் இனிப்பாக சுற்றி
இன்னாத பலதையுமே இன்னதென செய்தே
பத்திரமாய் இருக்கத்தான் பெண்களுமே துன்பம்
பலவும்கண் டேதுயரைப் பெற்றழிந்தே போயே
தித்திக்கும் போதையாலே திருமதிகள் கூட
திக்கற்றே அலைகின்றனர் தீமைகளை செய்தே
முத்தாக வளரவேண்டிய பெற்றெடுத்த பிள்ளை
முன்னேற்றம் காணாத அவலத்தில் இங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பிடுவாய்

உலகினிலே வாழ்கின்ற உயிர்களிலே அன்பையுமே
உவந்தளித்தே இணக்கமுடன் வாழ்ந்தே
கலக்கமற்று களித்தின்புற் றெப்போதும் பூமியிலே
கடவுளாக அனைவரையும் எண்ணி
உலக்கையினால் இடித்தெடுத்தே உண்ணுகின்ற உணவெல்லாம்
உற்சாகம் நிறைந்துவழிந் தோட
சலமற்றே வழங்கின்ற மனிதர்கள் பல்லுயிரை
சலனமற்றே நேசிப்பதாலே பொங்கும்

ஆதலாலே உலகத்தில் அனைவருமே உண்மையான
அன்பாலே இணைந்தோமே எல்லாம்
காதலாலே உணவையுமே சிற்றுயிர்க்கும் வழங்குகின்றோம்
கடவுளுமே ஏங்குவானே எங்கள்
ஆதரவை பெற்றுக்கொண் டெம்முன்னே வாழவேயே
அன்புதானே எப்போதும் எங்கும்
பாதகமே இன்றியெழும் என்றதாலே அனைத்துலகும்
பாவமின்றி பகுத்துண்டே வாழ்வோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயக் கூட்டின் விம்பங்கள்

அன்பின் படிமம் என்னுள்ளே
அகத்தின் ஒளியாய் வெளிப்பட்டே
என்பும் உருகும் அளவிற்கே
என்னில் உன்னின் உருவத்தில்
கன்னல் தின்ற சுவையினாலே
கன்னம் பூரித் தெழுந்தனவே
மன்றில் நீயே வந்தென்னை
மணமே புரிந்து காத்திடுவாய்

இதயக் கூட்டின் நாயகனே
இனிமை தந்து கலந்தவனே
அதரம் உன்னைக் கண்டாலே
அங்கும் இங்கும் அலைகிறதே
பதறிப் போயே கண்களுமே
பட்டென் றெழுந்தே பறக்கிறதே
உதறிப் போட்டே எழுந்தேனே
உன்றன் அன்பில் பயத்தினையே

பண்பில் நீயே உயர்ந்தவனே
பகட்டை விரும்பா பண்பாளன்
மண்ணில் கண்டேன் மன்மதனை
மனத்தின் சிறையில் அகப்படுத்தி
விண்ணில் இணைந்தே பறப்போமே
விந்தை புரியும் உன்னுடைய
கண்ணில் விழுந்தே மூழ்கின்றேன்
கடலே உன்றன் இதயத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதல் நீரில் நீந்துகின்றேன்
காதல் மன்னன் உன்னுடனே
ஆத லால்நான் மிதக்கின்றேன்
அன்புக் கடலில் மூழ்கின்றேன்
சாதல் தாண்டி வாழ்கின்றேன்
சாவைத் துரத்தி அடிக்கின்றேன்
கூதல் தொலையும் உன்னுடைய
கூட்டில் அணையும் போதினிலே

பாரில் கண்டேன் உன்னையே
பார்த்துப் பார்த்து ஏங்குகின்றேன்
தேரில் வந்தாய் இனியவனே
தேனும் கசக்கும் உன்முன்னே
நாரில் கூட கல்லூரிக்கும்
நல்லான் உன்றன் அன்பாலே
காரி ருளிலே எழுந்தேனே
காந்தன் உன்றன் நினைவாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையே இன்பம்

உயிர்க்கு எல்லாம் உவந்தே அளித்து
பயிர்க்கு நீராய் பரிவுடன் வழங்கி
வயிற்றின் பசிக்கும் வாரியே தந்தே

ஆற்றின் வனப்பும் ஆடையாய்ப் புவிக்கு
காற்றையும் ஈந்தே காரியம் யாவினும்
மாற்று இருக்கும் மண்ணைத் தந்தே

பூவும் காயும் பூக்கும் மரமும்
கூவும் குயிலும் கூடியே ஆடும்
தாவும் குரங்கும் தரணிக்குத் தந்தே

மாலும் அயனும் மாற்றா அருளை
ஆலும் வேலும் ஆகவே அருளி
பாலும் நெய்யும் பாதாமும் தந்தே

இரவும் பகலும் இனிமை காட்டி
உரசும் உயிரை உயர்த்தி ஏற்றி
அரவும் நடுங்கும் இருட்டைத் தந்தே

பரவும் புகழை பரப்பிக் காட்டி
புரட்டி எடுக்கும் புவியின் நடுக்கமும்
அரட்டியே விடுகிற அகிலம் தந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை

அன்பின் கடலே அழகின் உருவே
மன்பதை உலகில் மரிக்கா வாழுவே
கன்னல் எனவே கனிந்த அன்பனே

உயிரைத் தந்தே உடலையும் வழங்கியே
பயிராய் நாளும் பக்குவமாய் உயர்த்தி
கயிறாய் தன்னை கழித்த அன்பனே

அறிவை திரட்டி அகம்சிறந் தழகாய்த்
தேறியே நாளும் தேக்கம் இன்றி
ஏறியே வளர ஏற்றிய அன்பனே

வாழும் போதே வாழ்வில் உயரவே
தாழும் பயத்தை தவிர்த்தே எழவே
தொழும் இறைவனும் தொடரும் அன்பனே

பலாவாய் நிழல் அளித்துக் காத்தே
நிலாவாய் உதித்தே நித்தமும் ஒளியாகி
உலாவி வந்த உயிரான அன்பனே

பகலும் இரவும் பகட்டும் காணாதே
அகமும் புறமும் அன்பால் இணைந்தே
மகவிற் காக மாயும் அன்பனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரன்பின் பெருவெளி

அன்பின் இலக்கணம் அகிலம் காணவே
என்பும் பிறருக்கு என்றே வாழ்ந்து
உண்மைத் தன்மை உலகில் வழங்கி
கண்ணில் காட்டிய கருணை யாலே
எங்கும் விரிந்தே எட்டாத தூரத்தில்
அங்கும் நீயே அற்பம் தவிர்த்தே
தயக்கம் இன்றி தரணிக்குப் பாசத்தை
இயக்கம் போலே இனிமை யுடனே
கொடுத்தே கொடுக்க கொடுக்க குறையா
எடுக்க எடுக்க எடுத்தே முடியா
கருணை வெள்ளம் கரைபுரண்டு பாயும்
அருமை நதியாய் அழகாய்ப் பாய்ந்தே
எமரிவர் பிறரிவர் என்றே வேறுபாடு
தமரிடை புவியில் தரமாய் நீக்கி
பாசம் மட்டுமே பாரிற்கு வழங்கி
வேசம் களைந்தே வேங்கை போலே
பாய்ந்த பாலன் பாலாய்ப் பருக
பால்வெளி யிலேயே பரந்த மனவெளி
ஆல்போல் அகண்டு அவனியில் விரிந்தே
வம்சம் வம்சமாய் விரித்தே வளர
அம்சம் ஆகவே அருளைப் பொழிந்தே
பூமித் தாயை பூரணம் ஆக்கி
தாயே நிழலைத் தருவாய் தருவாய்
நீயே பேரன் பின்நீண் டபெருவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவினை விரிவுசெய்

உனக்குள் எரியும் உன்னத நெருப்பை
கனதி ஆகவே கற்பூ ரமாயே
பற்றிட வைத்தே பக்குவ மாகவே
கற்றுப் பதமாக்கி களிப்புடன் நிமிர்ந்தே
சுவாலை நீட்டி சுண்டி இழுக்கும்
சவாலை வெல்லும் சக்கர மாக்கி
அகிலத்தில் உள்ள அனைத்து அறிவை
பகிர்ந்து வழங்கப் பம்பரமாய் உழைத்தே
தேடி அலைந்து தேனாய் சேகரித்து
நாடிச் சென்றே நானிலம் போற்ற
எங்கே உள்ளதோ எதில் உள்ளதோ
அங்கே சென்றே அதனைப் பெற்றே
மூளை கொண்டே மூப்பினை அடைய
பாளை வெட்டிப் பார்த்தே இயற்கை
அறிவியல் பெற்றே அறியாமை நீக்கி
உறியில் இருக்கும் உக்காப் பானை
உள்ளே தயிரே உண்டான விதத்தை
கள்ளாய் மாறி கரும்பாய் இனித்த
வேதியல் அறிந்தே விஞ்ஞா னமிதென
ஆதி பகவன் ஆய்ந்த முறைமை
தன்னைப் பகர்ந்தே தன்னிலை இழந்தே
பன்னை மரத்திலும் பகட்டுக் காட்டி
திரியும் ஆவித் திரிபைப் படமாய்
அரிந்து காட்டி அறிவைத் தூண்டும்
பற்பல கல்வி படிப்படி யாகவே
கற்றும் உயர்ந்த கடலாய் மாறிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வெனும் வானவில்

பூமியிலே மலர்ந்தெழுந்த பூவாய்
புதுமையிலே செறிந்துயர்ந்த நாமும்
சாமியாலே தினந்தோறும் அன்புச்
சக்கரத்தில் சுழன்றெழுந்த துன்பத்
தீமித்தே விடுதலையாய் இன்பம்
தித்திப்பாய் பெற்றெடுத்தே நாளும்
பூமிமீதில் புரட்சியினை செய்தே
புதுமையான செழுமையினைப் பெற்றே.

பலநிறங்கள் பொருந்தியெழும் வாழ்வை
பண்புடனே இணைத்தெடுத்தே பண்பின்
கலைவையாக செய்துமிளிர் பூவாய்
கணங்கள்தோ றுமினிமை ஊட்டி
இலக்காக நினைத்தெழுந்து தேனாய்
இலக்கினையே குறியாக்கி புண்ண
துலங்கிடுமே செழுமையான வாழ்வே
துயரநீக்கி அனைத்தினையும் தந்தே

அபிராமியின் கடைக்கண் பார்வை
அகிலத்தில் செழுமையினைத் தந்தே
கபிலரைப் போன்றேகவி நறவம்
கணக்கின்றி வழங்கிநாளும் வானின்
சிபியாக இரக்கத்தில் நெஞ்சம்
சிறந்துயர்ந்த சிவனுடைய நாமம்
செபித்தழைத்தே வாழ்வினையே தினமும்
செழுமையாக்கி உயர்வோமே வானில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தனையும் பெற்றெடுத்து மண்ணில்
அன்புடனே வாழ்வினையே தந்தே
எத்தனையோ இடர்கடந்தும் எங்கும்
எவரையுமே நோகடிக்கா வாழ்வை
வித்தாக விதைத்தெடுத்தே மக்கள்
விரும்பியேதான் வாழுகையில் இனிய
முத்தான பிள்ளைகளைப் பெற்றே
முழுமையான செழுமையையே பெற்றோம்

தனத்தினையே பெற்றெடுக்க நாவில்
தங்கமகள் பெயரினையே சொல்லி
கனமாயே உழைப்பினையே கொட்டி
கணக்கில்லா உபரியினை சேர்த்தே
மனத்திலேயே செழுமைத்தீ யூற்றி
மங்காத சிந்தையுடன் வாழ்வில்
வனத்தைப்போல் செழுமையாக எழுந்தே
வனப்பினையே அன்புடன் பெற்றே

பிள்ளைகளும் செல்வமுமே பெற்றே
பங்கமில்லா வாழ்வினையே நாளும்
அள்ளிஎடுத்தே இன்புற்று வாழ
அன்புடனே எத்திசையி லுமே
பள்ளிகொள்ளும் நாராயன் பக்தி
பங்கமின்றி தந்துயர்த்தி என்னை
கொள்ளைகொள்ளும் செழிப்பாலே வாரீர்
கொண்கனுடன் அன்பால் வாழவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலி

கரும்பென இனிப்பாள் சுவையின் இன்பம்
கட்டியே தந்தே காப்பாள் மென்மை
கருவிழி யாளே மெய்யைச் சேர்ந்தாய்

இரும்பென நினைத்தேன் இனிமை யென்றே
இணைந்தவள் என்னை குளிர்வித் தாயே
இனிப்பினைப் போலே இனித்தாய் அன்பால்

திருவென வந்த பெண்ணே எல்லாம்
தருகிற இறைவி உன்னால் நானே
தரணியில் உயர்ந்தே அடைந்தேன் சொர்க்கம்

தருவென நிழலைத் தந்தே என்னை
தங்க மழையில் நனைத்த பெண்ணே
தரணியில் உனக்கே நிகரே இல்லையே

மருதமலை முருகன்அருளால் வந்தே
மன்மத அலையில் என்னைத் தள்ளி
மலரினைப் போலே வாசம் தந்தாய்

கருமிருள் காட்டில் சிவத்த நீயே
காற்றிலே அசைந்தே எழுந்தாய் முன்னே
கட்டியே அணைத்தேன் பெற்றேன் இனிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை

மண்ணில் தவழ்ந்து மகிழ்ந்து பிறைபோல்
பண்ணுடன் உயர்ந்து பண்பும் பயனும்
கொண்ட அன்பு கொஞ்சும் நெஞ்சம்
வண்டாய் மொய்த்து வனப்புடன் வாழ்ந்தே
இன்பம் பலவும் இயல்பாய் அடைந்து
துன்பம் பலவும் கண்டே புவியில்
மெதுமெது வாக மேனி சுருங்கி
முதுமை வந்திட மயக்கம் களைந்தே
பற்றறுத் தேனும் பாலும் ஒக்க
பற்றா பற்றுடன் பற்றுவர் இறையை
இந்த வரையறை இனிக்கும் வண்ணம்
தந்த இயற்கை தள்ளா வகையில்
வாழ்ந்து வழிகாட்டி வரத்தைப் பெற்று
தாழா மண்ணில் திருவாய் எழுந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ தானே...

எழுத எழுத எழுச்சி யாக
தழுவிச் செல்லும் தங்கம் நீயே
நீயே இல்லா நிசங்கள்
நீயே இல்லா கணங்கள்
நீயே இல்லா இதயம்
எதுவும் வேண்டாம் எனக்கு வேண்டும்
நீயே நின்னருளே
நின்றன் கடைக்கண்
பார்வை தானே பங்கயம் என்னை
ஆர்வமாய் வாழவே ஆனந்தமாய் சிரிக்கவே
செய்யுமே வையகம் சரித்திரத் திலுள்ள
மட்டும் மாறா மனதில் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேடதாரிகள்

தனியனுக்கு பாதுகாப்பே இல்லை புவியில்
மனிதம் மரித்துப் பலவருடம் ஓடி
புனிதம் புனிதமென்றே கத்தித் திரியும்
முனிகள் கெடுதிசெய்வார் கள்

தன்தலைக்குத் தானாக சூடுவாரே கீரிடம்
மன்பதைக்கு செய்வார் அநீதியை இன்பமாய்
சுந்தரமாய்ப் பேசிக் கவிழ்ப்பார் அனைவரையும்
அந்தரும் தானும்ஒன் றென்று

பகல்வேசம் போட்டு பலநாள் பசுவின்
நகலாய் நரிகள் திரிய இயலாது
இன்றோ பிறகோ உண்மை உலகுணரும்
அன்றழிந்தே போவா ரவர்

பன்நாடு சென்றாலும் மாறா குணவியல்பு
பன்னை இலையின் மணத்தை அகற்றவே
முன்னைப் பழம்பொருளா லும்முடியா தென்பதை
நன்கறிவார் உத்தமர் கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேடல்

தொலைந்தே போனேன் தொலைவாய் என்னிலே
அலைந்து உலைந்து அலைந்தே போனேன்
ஆறல் என்பதே அற்ற ஆளாய்
தேறல் இல்லை தேடல் உண்டே
எனக்குள் தேடலே என்னைத் தூண்டுதே
உனக்குள் ஆழம் உள்ள வரையுமே
பறந்து பறந்து பாடித் தேடியே
இறக்கும் வரை இரையைத் தேடென
தூண்டத் தூண்டத் துலங்கும் நானே
தோண்ட தோண்ட தேனாய் இனிக்குதே!
இனிக்குதே இனிக்குதே இனிமேல் எல்லாம்
இன்பம் தானே இனிமையாய் எனக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி

காசில்லா மாந்தர்க்கு இல்லாப் பொருளிது
ஆசில்லா அந்தர்க்கும் இல்லையாம் என்றுதான்
தூசிபோலும் மாந்தர்கள் பேரத்தைப் பேசித்தான்
பாசிபோல் உள்ளார் படர்ந்

அந்தர்க்கே இல்லையா? யாழில் இதுவென்று
விந்தையாக பார்க்கிறார்கள் பூமியில் என்னது
அப்படி ஆயிற்று கேட்பார் எவருமே இல்லையா
செப்படிவித் தைபோலுள் ளதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சு பொறுக்குதில்லை

சுதந்திரம் கேட்பார் சுத்தமாய் உணரார்
உதயம் பாரார் உதயம் நினைப்பார்
புறம்பேசி திரிவார் பூமியில் வாயால்
அறத்தைக் கொல்வார் அன்பை உணரார்
இல்லா பலதும் இருப்பதாய் கூறுவார்
பல்லால் கடித்து பாம்பை கொன்றேன்
என்பார் கயிற்றில் எலும்பை திரித்தேன்
என்பார் கண்டதும் எடுத்து கூறுவார்
சுயலாபம் ஒன்றே சிந்திப் பாரே
அயர்வு இன்றி அடுத்தவர் வாழ்வை
அழிக்க முயலுவர் அன்பே அறியார்
கழிவு பற்றி கண்டதும் கதைப்பார்
புவியில் கழிவை புதைத்தே அழிப்பர்
அவிவது துடிக்கும் அதுவே ஓடும்
என்றே ஏமாற்றும் எத்தர் எங்கும்
நின்றே இருப்பர் நியாயம்
அற்ற அற்பர் அன்பி லாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மை

எங்கும் இல்லை எதிலும் இல்லை
அங்கும் இங்கும் அதட்டிப் பேசி
அதிகாரம் செய்யும் அதிகாரி இடமும்
உதிரியாய் சுற்றும் ஊரா னிடமும்
நேர்மையை காணோம் நேராய் நடந்தால்
ஓர்மம் கொண்டே ஒதுக்கி வைக்கும்
அற்பர் நிறைந்த அகிலத்தில் எரியும்
மற்றவை அனைத்தும் மாற்றானுக் கில்லை
எல்லாமும் எல்லாரும் எப்போதும் பெறவே
வல்லார் விடார் வகுத்து வழங்குவர்
தனக்கே உரியர்க்கு தன்னலம் மிக்கவர்
மனதே ஊனமாய் மயங்குவ தேனோ
அற்ப பொருள் அடைய சக்தியை
இற்றுப் போனவர் இறுக்கி பிடிப்பதால்
அத்தனை மனிதரும் அவல வாழ்வில்
இத்தனை செயலும் இழிவாய் செய்யும்
மானிடர் உலகிற்கே அவமானம்
ஏனிந்த மானிடர் எங்கள் உலகிற்கு!!!??



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசை

பாரில் பலதும் எடுத்தாண்ட ஆத்மாக்கள்
தாரிலே பூப்போல் உதிர்ந்து விழுமே
உலகினைத் துறந்து ஆசையி னாலே
கலகம் புரிந்தழி யும்

அழியுமட்டும் ஆட்டம் அதிகம் புரிந்தே
கழிக்கும் பொழுதை சுயநலமே இன்பமென்று
பல்லிழித்து திரிகிற அற்பர்கள் ஆசையின்
கல்பட்டு பேயென்றா னார்

சிரிப்பாலும் செய்கையாலும் ஏமாற்றி உலகில்
நரியாக சுற்றியே ஊளையிட்டு நல்ல
புரிவதாக தோரணை காட்டித் திரிவார்
மரிக்கும் வரையிலும் தான்

அவர்செய்கை கண்டறிந்தோர் மீதே பழியை
அவனியெங்கும் தூற்றித் திரிந்தே பழிக்க
முயலுவார் ஊரை மயக்க பலதும்
நயமாய்ச் செய்வா ரவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரோகம் துரத்து

நம்பியே வந்திணைந்த நண்பனை ஏமாற்றி
நம்பிக்கை மோசம் நயமாக செய்தவர்
தம்மின் பிழையைத் தமரின் அறிவுரையால்
இம்மியும் நினைத்துணரா தார்

நசிந்தாலும் துன்பத்தில் நாளெல்லாம் வாழ்ந்தும்
கசிந்த இதயத்தை போற்றுபவர் வாழ்கின்ற
ஊரிலே உள்ளவர்கள் ஊமைகள் போலாகார்
ஊரில் நிலைக்கும் புகழ்

நாட்டிற்கும் வீட்டிற்கும் நாற்றிசைக்கும் இன்பமாய்
தேட்டம் பெறவே உழைத்தே அனைவருக்கும்
பாரில் உவந்தளித்தே அன்பின் அரவணைப்பில்
காரிருளில் விளக்காக வாழ்

நல்லதைச் செய்கின்ற நல்லவராய் வாழ்ந்துலகில்
அல்லதை இல்லா தொழித்தே உயிரில்
பொறாமை துரோகம் பொருதல் களைந்து
அறாமல் உறவில் இணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பதியர்

ஈருடல் ஒருயிராக ஈமை தாண்டி
பாரு போலே பறந்து பறந்தே
நேசித் தன்பு நெஞ்சம் பரிமாறி
யோசனை இன்றி யோகம் போன்றே
அனபைச் செலுத்தி அருமை வாழ்வை
கன்னலின் இனிமையை கருத்துடன் சுவைப்பது
போலே மெல்லென பொறுமையாய் அனுபவித்தே
ஆலே போல் ஆறவே நிழலாய்
உள்ளம் உள்ளதை உள்ள படியே
கள்ளம் இன்றி கவர்ந்தே கட்டித்
தழுவியே துன்பம் தாங்கி இணைந்தே
எழுத்தாய் உடனே எழுந்து தோளைக்
கொடுத்தே கொக்குக் கொப்பாக காவலாய்
எடுத்த காரியம் எல்லாவற்றிலும் துணையாய்
ஒருவர்க் கொருவர் ஒற்றுமையாய் சந்ததி
பெருக்கி வாழ்ந்தே பெற்ற கடனையும்
தீர்த்தே துன்பம் தூரத் தள்ளியே
தீராக் காதலால் தீயையும் அணைத்தே
காவியம் போலாய் கற்பகத் தருவாய்
ஓவியம் போலாய் ஒளிரும் இணையர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாற்றிடு அப்பனே

அப்பனே முருகா அரோகரா என்றே
சுப்பன் உன்னை சுறுக்கா வாயென்றே
அழைக்கிறம் வந்தே அணைத்து இலங்கைக்கு
மழையினை தந்தே மனசார செழிப்பான
நிலைமையை உருவாக்கி நிறைத்திடு மனதினை
தலைமையை சீராய் தன்னலம் அற்ற
முடிவினை எடுக்க முயற்சியை ஊக்குவித்
தடிமை வாழ்வை அகற்றி தெருவில்
தொங்கிப் போயே தொடராய் வெயிலில்
மங்கிப் போயே மனதும் வெறுத்தே
நடைப்பிணம் ஆகியே நடத்தும் வாழ்வை
உடைத்தே ஈடேற்றி உன்றன் அருளாலே
சீராக்கி விட்டே சீரான மனதுடன்
ஊடாட உருவாக்கி ஊர்கள் எல்லாம்
பாராட்டி வாழ்த்த ஆக்கிடு அப்பனே!
பாராளும் திருவே பம்பரமாய்ச் சுற்றிடு
தலை கீழாக்கி தலைமையை மாற்றிடு
ஈசன் மகனே ஈழவேந்தன் முருகனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுற்றுச்சூழல் காப்போம்...

மனிதராய் எம்மைச் சூழ்ந்த
மாசிலா இயற்கை தன்னில்
கனியுமாய் அன்பில் வாழ்ந்தே
கல்லிலும் நேசத்தை காட்டி
நனிசிறந் தாசை ஊட்டி
நசையினால் கண்ணாய் காத்தே
அனிச்சமாய் அதற்கே ஏதும்
ஆகுமால் விம்மிப் பொங்கும்

விலங்குகள் எல்லாம் விரும்பி
விந்தையா பார்த்தே ஈரம்
கலக்குமா றில்லா உண்மை
காதலில் கண்டே காட்டி
நலமுடன் நாளும் ஆற்றில்
கலங்களும் நனைய நன்றாய்
பலமுடன் வாழ்ந்தே மானாய்
பாரினில் சிறந்தே பொங்கும்

காற்றினால் சுவாசம் சீராய்
காட்டினால் உலகம் முன்னே
நாற்றினால் உண்ணும் தீனி
நாளுமே தரும் தங்கம்
ஆற்றினால் மீனே அள்ளித்
ஆறுதலாய் வாழத் தந்தே
மாற்றினால் ஒவ்வொன் றுமே
மரகதம் ஆகவே தந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்குகின் றாயே நீயே
கடைசியும் முதலும் நீயே
ஆக்குவாய் அழிப்பாய் காப்பாய்
ஆதலினால் உன்னைக் காப்போம்
வாக்குமாய் நோக்காய் நிலவாய்
வானுமாய் அருளும் ஓசை
நாக்குமாய் புவியின் ஊனாய்
நடத்துகின் றாயே தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலாச்சோறு

சுட்டிப் பாப்பா சோறு தின்ன
எட்டிப் பாரு எந்தன் நிலாவே
தங்க மகன் தட்டை தள்ளுறான்
மங்கா அழகி மனதைப் பறித்த
வட்ட நிலாவே வந்தே சொல்லு
முட்டைச் சாதம் முட்ட வயிறு
முட்ட உண்டால் மூளை வளரும்
திட்ட மாட்டா தினமும் அம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும்வரைபோராடு

நதியாய்ப் பாய்ந்தே நாணலாய் வளைந்தே
விதியின் கொடுமையை விண்ணேறி உடைத்தே
சதிகளை முறியடித்தே சாத்திரம் கூறும்
கதிர்களை எல்லாம் கண்டு பயந்தே
மூடநம் பிக்கையால் மூடராய் எம்மை
மட்டம் தட்டவே மதியினை மயக்காது
விரைந்தெ முந்தே விஞ்ஞா னத்தில்
கரைந்தே தாண்டும் காட்டா றாகவே
வாழ்க்கைத் தடைகளை வாட்டும் துன்ப
காழ்ப்பு ணர்வை காரமான பேச்சை
பொறாமை அழுக்கு பொங்கும் மனதினை
ஆற்றா மையால் ஆற்ற முடியா
மனிதர் பார்வையை மட்டம் தட்டியே
காட்டையும் மலையையும் காற்றாய்த் தாண்டி
ஓடுமே ஓடி ஓடியுயர்ந் தோடியே
தன்றன் இலக்கை தானாய் அடையும்
அன்பின் ஆறாய் அலைந்தலைந் தேடி
கடலை அடையும் கங்கை போலாய்.
இலக்கை நோக்கி இயங்கி வேகமாய்.
ஏணியாய் ஏறியே ஏட்டுட னுலகிலே
வாணியாய் இயங்கியே வாயாரப் பாடியே.
நாடும் ஆசையை நாடியே பிடிக்க
வீடும் உன்னை விரும்பா விடினும்
வீடு தேடி வீறுடன் எழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலைத்தேடி

பறவையினம் ஓடுகின்ற வேகம்
பட்சிகளும் தேடுகின்ற ஆர்வம்
கறவையினம் நாடுகின்ற அன்பில்
காட்டினது விலங்குகளும் நாடும்
மறத்தினையே கொண்டவனாய் மனிதன்
மங்கலமாய் வாழ்கின்ற தேவை
அறத்தினுடன் கடைப்பிடித்தே எழுந்தான்
அழகியலைத் தேடியே பிடித்தான்

விடியலைத் தேடியே அலைந்தான்
விடியுமென்றே நம்புகின்ற மனிதன்
மடிந்தேபோய் விட்டொழிய முன்னே
மணவாழ்க்கை ஒன்றினையே பெற்றே
நடிக்கின்ற வாழ்விலேயே தன்னின்
நட்பினை யும் செலுத்துகின்ற மக்கள்
படிப்பினையே கிடைக்கின்ற மட்டும்
பாவத்தில் இருந்தே மீளார்

இருந்தபோதும் விடியலைத் தேடி
இறந்தபோதும் விடியலினைப் பெறாரே
திருவினையே கண்டாலும் நம்பார்
தித்திக்கிற பாவத்தை செய்வார்
மருளில்தான் கிடக்கின்ற வனப்பு
மண்ணிலேயே கண்டாரும் மயங்கி
கருவென்றே மறுபடியும் ஆகி
கருமத்தில் உழல்வாரே அற்பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலையிலும் எழும்பாரே சூரியன்
கனதியென புறப்பட்ட பின்னர்
ஆலைகளின் சத்தமுமே அங்கே
அடுக்கரையில் கேட்டுவிட்ட பின்னர்
பாலைத்தான் விற்கின்ற மனிதர்
பக்கத்தில் வந்ததெழுப்பி சென்றார்
காலையையே தீண்டாமல் இருப்பார்
காலையிலும் விடியலைக் காணார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணென்ன

அன்பாலே ஆளுகின்ற அன்னை
அகிலத்தின் உற்பத்தி இடமே
என்பையுமே எனக்காய் உருக்கும்
எளிமையாலே எம்மை வளர்க்கும்
உன்னுடைய மார்பில்தான் உணவின்
உறுதியினைப் பெற்றுவளர்ந் தோமே
மன்பதைகள் உலகிலேயும் உதிக்க
மறுஜென்மம் பெற்றவளே பெண்ணே

ஆடையினை அசைத்தின்புற் றெழுகின்
றாசையினை கொண்டுவளர் ஆண்கள்
பாடையில் போகுமட்டும் பெண்ணே
பக்கபலம் ஆகவே வேண்டும்
காடையாக இருப்பினுமே அன்னை
கருப்பையினுள் இருந்துதானே புவிக்கு
ஊடலாலே வந்தவனே உன்றன்
உள்ளத்தை தெரிந்தாலே வெறுப்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேதைக்கு நீதி

அறியாத பேதை அவளும் நினைத்தாள்
பறிக்க தனக்கு இயலும் இகத்தில்
முழுவதும் தன்கண் ணசைவில் படியும்
விழுகின்ற எல்லாம் எனது

வல்லார் வகுத்ததே நீதியென்ப தறியாத
நல்லாள் அவளுமே உண்மை யுரைக்க
கொடியவர் கல்லால் அடித்தே தாக்க
கொடியிடையாள் விட்டாள் உயிர்

துறக்கும் நிலையி லுணர்ந்தாள் உலகின்
அறத்தினை காதலற்ற மன்மதன்கள் சூழ்ச்சியை
வேண்டாம் புவியில் இருப்பென்றே ஓடினாளே
தீண்டதகா பாவிக ளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் நினைவு

பார்த்த விழிகள் இனிமை இதமாய்த்தந்
தீர்த்தே அழகின் படிமம் படிந்ததாலே
கார்காலம் என்றாகி நெஞ்சத்தை ஈரமாக்கி
ஆர்ப்பரித்தா தும்சங் கென

சங்குக்  கழுத்தை சுழித்தழகாய் நீபார்த்த
மங்கா நினைவில் அலைகின்றேன் நீயுமோ
எங்குதான் சென்றாயோ நெஞ்சமது ஏங்கித்தான்
அங்குமிங்கும் பாயுமா றாய்

நிலவிலும் தேடியே போகின்றேன் அன்பால்
கலமாய் உதவுகின்ற உன்றன் நினைவால்
வரமாயே வந்து மறைந்ததுதான் ஏனோ
அரமாய் அறுக்கும் நினைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்பர்

தம்சுகம் ஒன்றே உலகில் உயர்வென்று
ஓம்பி பிறரது துன்பத்தை கண்டும்
கவலையினைக் கொள்ளார் புவியில் தனக்கு
கவண்வேண்டு மென்றெண்ணு வார்

கடகட வென்றுதான் பேசி அதிற்பொய்
கடலளவு சேர்த்தே இறைவர் கடந்துள்
இருப்பாரென் றுளறுவார் நம்பார் மனதின்
இருட்டில் தடுமாறு வார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதை

இனிக்கும் நினைவாய் மனதை வருத்தும்
பனிக்கும் வெயிலுக்கும் உள் கனியா
கனத்திருக்கும் வாழ்விலே காற்றில் நடக்கும்
நனவிலித் தன்மை தரும்

நீச்சல் குளமே இருக்காது நீந்துவாரே
கூச்சலைப் போட்டே இன ஏச்சினைப்
பெற்றும் உலகமீதில் வீணே நிலையழிந்தே
பற்றுவார் போதையின் நிழல்

நிழலும் மறக்கும் நினைவை இழக்கும்
அழலென கக்குகின்ற தீ எழவே
உருவமும் மாறுமே அன்பாளர் களையும்
பருவத்தை யும்மிழப் பர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலைக் காட்சி

கடலுக்குள் தீப்பந்து போலாய் வெயிலோன்
மடல்விரித்தே நீலவானம் மேல் திடமாய்
எழுந்தே புவியில் கதிர்பரப்பி தன்னைத்
தொழுகின்ற மாந்தர் எழ

எழுந்த அவனே சிவந்தகதிர் தந்து
விழுந்து மறைவதற்கு முன் எழுகின்ற
ஆவினங்கள் புற்களைத் தேடியே சென்றனவே
காவில் பறவைகத் தும்

இரைச்சல் செவியில் விழவே மனிதர்
திரைவிலக்கி கண்டாரே ஏல் தரைதொடும்
சுந்தரத்தை ஆதலாலே முன்னே விரைந்தனரே
இந்திரியம் தேடிப் பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர்களுக்கு

காமம் அடைய வயதிது அல்லவே
சாமத்தில் கூட படி

கற்பதால் ஏற்றம் பெற்றிட ஆசிரியர்
சொற்களைக் கேட்டே உயர்

பெற்றோர் மனதை குளிர்விக்க அன்புடன்
உற்றதை செய்தே உயர்

காசினி மேலே அறிவினை தந்துயர்த்தி
ஆசினை நீக்கும் இறை

இளமை அழிவதற்கு முன்னர் உயர்ந்த
வளமையை பெற்றுயர்ந்தே வாழ்

கத்தியும் வாளும் கலகமென்று ணர்ந்துன்றன்
புத்தியினைத் தீட்டி எழு

ஒழுக்கத்தால் மேதினி மேல்எல்லாம் ஆகும்
விழுப்பமாய் ஆதலால் நில்

போதை எடுக்காச் சிறப்பினைப் பெற்றவர்
பாதை மறவா உலகு

மாணவராய் வாழ்க்கையில் உச்சம் தொடவே
காணுகின்ற கானல் தவிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிதாய்ப் பிறப்போம்

தீங்கான பழக்கங்கள் எம்மை அண்டா
திகட்டாமல் வாழத்தான் மண்ணில் வந்தோம்
ஏங்கிஏங்கி சாகாதே எதிலும் வீரம்
எப்படியும் உயரத்தைப் பிடித்துப் பற்ற
பாங்கான பழக்கங்கள் நாடி நாமும்
பாரிற்கே நலனைத்தான் வழங்க வேண்டி
நாங்களுமே கூடித்தான் விதைப்போம் அன்பை
நாளுமே மனிதமனங் களிலே வித்தாய்

அன்பாலே புதிதாய்ப் பிறந்து விண்ணில்
அடைவோமே புதிதாய்ப் பலதும் பெண்ணின்
கன்னலான பேச்சினாலே மகிழும் நீவிர்
காரிகையின் சுதந்திரத்தை வெறுக்கும் சித்தம்
தன்னிலேயும் மாற்றத்தைக் காண உண்மைத்
தவிப்புடனே வாழுகின்ற உள்ளம் எல்லாம்
புன்னகைத்தே புதிதாகப் பிறந்த கண்ணே
புதியஎண்ணம் விதைத்தே எழுவாய் பாரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதிதாசன்

புதுச்சே ரிபெற்ற புதுமைப் புலவனே!
எதுக்கும் அஞ்சா எங்கள் தமிழின்
தவத்தால் பாரே தந்த தங்கம்
நவத்தை பாடிய நாயகன் கண்ட
முத்தே இரத்தினம் மூலவள் நிழலில்
சத்தாய் எழுந்தாய் சத்திய கவியே
குயில்ப் பாட்டால் குவலயத்தை எழுப்பிய
எயிலின் வாரிசு எங்கும் எழுச்சியை
கொட்ட செங்குந்தம் கொணர்ந்த சீரியன்
ஈட்டியைத் தீட்டாமல் இங்கு மாந்தரை
பாட்டால் தீட்டி பக்குவப் படுத்திய
ஏட்டின் கர்த்தா ஏணியாய் காசினியை
காத்த செங்கோல் காவலன் பாட்டால்
சாத்திய மாலையில் சக்தியை சாந்தமாய்
உணர வைத்தே உலகை காக்க
கணமும் உழைத்த கவிஞனே வாழ்க
நின்றன் பாடல் நித்தில முழுதும்
மின்னியே மங்கா மின்னாய் மாசற்ற
ஒளியாய் பரவியே ஒலிகள் அனைத்திலும்
விளிக்கப் பட்டே விந்தைக் கவியாய்
அண்ட மெல்லாம் அண்ணலே நீயே!
கண்டம் முழுதும் கவிதை மழை
பொழிந்தே பயிரை பொலிவாய் வளர்த்தே
செழிப்பாய்த் தந்த செம்மலே வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை போற்றுவோம்

மனித இனத்தின் உரிமைகள் போற்றி
கனிவால் எழுகின்ற அன்பால் உலகில்
புதுமை படைக்க சமத்துவ இன்பம்
பொதுமையையும் கண்டே உயர்

சாதியத்தின் தாழ்வினை வேரோட கற்றுகின்ற
ஆதிக் குடிகளின் தோற்றம் நிலைப்புமே
மண்ணில் புரிந்தே கலைவளர்த்தே மாந்தர்கள்
விண்ணில் பறக்க உழை

பேச்சும் கருத்தும் மனிதர் உரிமையதை
ஏச்சாலே துன்புறுத்தும் மோசடிப் பேர்வழிகள்
தன்னலம் எண்ணியே தட்டிப் பறிக்கத்தான்
முன்னே வந்தால் தடு

பிறப்பால் உலகை நிரப்புகின்ற எல்லாம்
இறப்பால் முடிந்தேதான் போகும் இடையில்
சுதந்திரத்தைப் பெற்றெழுந்தே பெண்ணுமாணும் சேர்ந்து
இதயம் சிறக்க வாழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை

ஆகாயத் தண்ணீர் ஆடியே வந்தே
மகரந்த துகள்களை மஞ்சன மாட்டி
இயற்கை உற்பத்தி இயங்கியல் வளரவே
செயற்கை அற்ற செம்மைப் படைப்பை
உயிர்க்கு வழங்கும் உழவைப் பெருக்க
கயிறாய் தேயும் கழனி மாட்டை
மகிழ வைத்தே மங்கல நீராட்டி
அகில உலகை அழகாய் மாற்றி
கல்லால் ஆன கட்டிடம் சூழ்ந்த
அல்லல் படும் அட்டைப் பதர்களை
எல்லை கடந்தும் எடுத்து காக்க
கடவுளாய் இருக்கிறேன் கரும்பாய் பற்றுங்கள்
கடந்தும் உள்ளே கண்ணாய் காக்க
படர்ந்து பாய்ந்து பற்றும் நெருப்பு
துன்பத்தை அழிக்க துணையாய் நிற்பேன்
இன்பம் காத்தே இகத்தில் என்றும்
நல்ல வாழ்வை நல்கியே செழிப்பான
மலராய் ஆக்கவே மண்ணில் நானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலையேற்றம்

சிலையாய்ப் போயி சிவந்த மக்கள்
அலையாய் வீதியில் அலைந்து திரிந்தே
பட்டினி கிடந்து பசித்து வதங்கி
எட்டாக் காயை எட்டிப் பிடிக்க
மூர்க்கன் இடமும் முட்டியே மோதியே
ஈர்க்கு அரிசியும் ஈரமும் வற்றியே
பச்சிளம் சிசுவும் பரிதி பட்டே
முச்சை அறுந்தே முன்னேற தவித்த
பட்டமாய் காற்றில் பறக்கும் துன்பியல்
சட்டம் தன்னில் சமுகம் மறைவாய்
இருக்கும் அவலம் தீவில் மட்டுமே
தருவும் நிழலை தரவும் மறந்தே
எம்மை வாட்டும் எமனிடம் அரசை
நம்மவர் என்று நம்பியே வழங்கி
அற்பன் எனவே அறிந்தே விலக்க
கற்பில் வழுவா களத்தில் சிங்கமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோக்கும் திசையெங்கும் பாரதி

அறிவால் நிரம்பிய காரிகைகள் ஞானம்
மறிப்பில்லா வெள்ளமாகி பாரதியின் மீசை
கணந்தோறும் பூமியிலே காற்றென வந்தே
மணம்பரப்பி எண்ணம் தரும்

மாதர் நிமிர்ந்த நடையிலே பாரதி
பூதலத்தில் நாளும் பவனிவந்தே எங்கள்
நினைவில் நிலைக்கின்ற ஆத்மாவாய் நித்தம்
மனைகளில் பூத்தமல ராய்

நாடெங்கும் காற்றும் சுதந்திரமாய் வீசியெழ
காடெங்கும் அச்சமின்றி சுற்றிவர நாளுமே
ஆற்றுவெள்ள மென்றே கனவுகள் பார்மீதே
மாற்றங்கள் பெற்றனவ னால்

இவ்வுலகின் மாற்றங்கள் நித்தமும் உன்னைத்தான்
இவ்வுலகில் நேரமும் கண்ணிலே காட்டுமே
திக்கெல்லாம் நீதானே முண்டாசுக் காரனே
மக்களின் வாழ்வின் ஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலையாமை

உடைகின்ற கூட்டினுள் அந்தமில்லா ஆத்மா
தடையின்றிக் காட்டுகின்ற நாள் விடையில்லா
கேள்வி மனதில் அதையுணரா மாந்தர்
வேள்வியினை செய்வார் உலகு

நாளும் பலவிநோதம் நாமெல்லாம் பார்த்தெழவே
கோளிலே வாழு முயிர் ஆளும்
தேவனும்தான் நினைப்பான் உலகத்தில் உய்யவே
காவலும் இருக்காதோ என்று

அநாதியான ஆவி அடைபட்ட மாயம்
விநோதமான ஒன்றுதான் என்று விநாயகரை
வேண்டித் தொழுதும் காணத்தான் இயலவில்லை
ஆண்டியாய்ப் போயினு மில்

கூடு சிதறிப் பரவிப் பரவசமாய்
ஆடுகிற ஆட்டம் கடும் பாடுமற்று
காற்றில் நடக்கும் நிலைவந்து சேர்ந்தாலே
ஆற்றில் கரையா உயிர்

காணவொரு காலம் வருந்தானே அண்டத்தில்
ஆணவம் ஓடும் தினம் காணலாமே
காமமும் அற்றுப்போய் தீராத காதலொடு
நாமெல்லாம் தேவனாய்த் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணெனும் பெருஞ்சுடர்

காற்றைப் பிழந்தெழுந்த தீயின் பெருஞ்சுடரே
ஆறுமே உன்றன் வடிவே புவியெங்கும்
சக்திச் சுடராய் நிறைந்து நிறைந்தவள்
முத்திரை தீட்டி எழு

இறையாய் உருவாக்கி உள்நின் றியக்கி
கறையழித்தே ஈடேற்றும் அற்புதமாய் பாரில்
வரமாக வந்துதித்த தென்றலே உன்றன்
கரத்தால் அணைத்து வளர்

அழகும் அறிவும் இணைந்தெழுந்த அன்பைப்
புழலாய் இறைக்கின்ற பேரின்பத் தீயாக
ஓங்கி ஒளிரும் கதிராக நித்திலத்தை
தாங்கிப் பிடிக்கின்ற தூண்

சக்தியாய் நீயின்றிப் போனால் சரித்திரம்
பக்தி எதுவுமே இல்லைப் புவிமேலே
ஆதலாலே பெண்ணாய் உலகில் எழுந்தநீயே
காதலொடு காவியத்தைப் படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளெனும் தாய்

செல்லமே என்றன் உண்மைச்
செம்மொழி நீயே அன்பே
எல்லாமும் எனக்கு உன்றன்
எதிரிலே இருப்பது தானே
மெல்லவே வந்தே என்னை
மென்மையாய்க் கட்டி முத்தம்
மெல்லித ழாலே தந்து
மெச்சுரை தருவாய் அம்மை

அழகிய பிள்ளை நீயே
அற்புத ஊற்றே அன்னம்
வழமையாய் உன்றன் அன்பின்
தளத்திலே வாழும் என்றன்
பழமையை எனக்கே காட்டும்
பக்குவம் கொண்ட தங்கம்
பழமதின் சுவையைத் தருவாய்
பரவசம் காட்டும் பிள்ளை

அன்னையின் அன்பில் நீந்தும்
அமுதமாய் உலகில் தோன்றி
அன்னமே நீயே காட்டும்
அன்பிலே உருகி நானே
தன்னிலை இழந்தே முற்றும்
தவண்டெழு கின்ற உன்னில்
முன்னிலை ஆகியே மூச்சில்
முப்பொழு தும்தான் நானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகினைப் புதிதாய் காட்டி
உற்புவித் தேனே உன்னை
கலக்கமே அற்ற நீராய்
கங்கையில் எடுத்த அன்பை
நலமொடு வளர்த்தே வாழும்
நல்லபொழு தெல்லாம் உன்னை
பலத்துடன் வாழக் காட்டி
பக்குவம் சொல்லித் தருவேன்

நிலவிலே நீயே நீந்தி
நித்திலம் முழுதும் சுற்றி
குலவிளக் காக என்றன்
குலத்தினை தழைக்க வைத்தே
சலமறுத் தெம்மின் சுற்றம்
சுற்றியே இருக்கும் வண்ணம்
மலமறுத் தினிய வாழ்வை
மங்கலத் துடனே வாழ்வாய்

வறுமையின் கொடுமை யினாலே
வற்றியே போன மக்கள்
வெறுப்பினைக் களைந்தே உண்மை
வெண்மையின் நிறத்தைக் காட்டி
வெறுமையை நீக்கி ஆன்றோர்
வேற்றுமை காட்டா அன்பில்
கறுப்பினை கலக்கா மலே
கருணையால் காத்தே வாழ்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்ப நரர் நாம்

தீட்டு என்பர் தீமை என்பர்
ஏட்டில் மட்டும் ஏற்றுவார் வீட்டில்
ஏனோ தானோ என்றே இருப்பர்
மனோயுத் தியும்தான் மந்தம் அதிலே
வாங்கார் பேச்சில் வக்கனை காட்டுவார்
ஏங்குவார் ஆனால் ஏற்றம் காணார்
தூங்கித் தூங்கி தூக்கமே கண்ணாய்
தீங்கினை வளரவும் தீமைக் கஞ்சுவார்
பண்ணை வெளியில் பங்கருக் குள்ளே
திண்ணையில் நடக்குதாம் தூய்மை அற்ற
செயல்கள் நாளிதழ் செய்தி களிலே
அயல்வீட் டாருடன் அடுக்கு மொழியில்
கேட்டே மனதில் கெடுதியை நினைத்தே
வாட்ட முற்றே வந்திக்கும் கடவுளின்
ஆட்டம் என்றே அடுக்கிப் பேசி
நாரதர் போலே நரித்தனம் செய்து
ஏரால் உழுபவர் ஏழை இழித்துரைத்
திலவச விளம்பரம் இனிமையாய் புவியில்
அலகினால் பரப்பும் அற்ப நரர்நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்..

நறுமணத்தால் கிறங்கடிக்கும் மெல்லிதழால் காம்புமீதே
நறுந்தேனைக் கொண்டவளே உலகினொளி காட்டியவள்
அறுஞ்சுவையால் தேனீக்கள் மொய்க்கின்ற திரவியமே
அற்புதத்தால் புவிமீதே தெய்வத்தின் திருவடிக்கு
குறுநகையை பக்கத்தி லிருந்தபடி மகிழ்வாயே
உச்சிமோர்ந்தே இரசிக்கும் பலன்களையே பெற்றாயே
உறுதியாலும் உழைப்பாலும் உயர்ந்தோங்கும் வண்டமர்ந்தே
உன்மத்தம் கூட்டுகின்ற வண்ணவண்ண பூக்களாயே

பலவர்ணம் பலவாசம் காட்டுகின்ற இனிமையாலே
பலபெயர்கள் கொண்டாயே கருத்தைக்க வர்ந்தாயே
கலம்பகங்கள் உன்னாலே உருவான கதைகளுண்டு
காலங்கள் மண்மீது இருந்தனவே வீரத்தினால்
சிலம்பத்தை சுற்றுகின்ற வீரர்கள் எல்லோரும்
சித்தரத்தை போலிருக்கும் சிற்றிடையாள் உன்னிடத்தில்
சலமற்ற மனதினையே தந்துவிட்டே தமிழரது
சரித்திரத்தை படைக்கத்தான் சங்கினைஊ திச்செல்வார்

காதலுற்ற ஆடவரும் கன்னியரை காதலிலே
காந்தமென ஈர்க்கத்தான் நின்றனையே கையிலெடுப்பார்
ஆதலாலே நீயேதான் உலகத்தின் இயக்கத்தை
அன்பினாலே தருகின்ற தேவியாயே எம்முன்னே
மோதலை இவ்வுலகி லிருந்துமுற்றும் விரட்டுகின்ற
மொத்தத்தில் சமாதான புறாவினையே போலத்தான்
பூதலத்தின் மீதினிலே மணம்பரப்பி காற்றிலேயே
பூக்கின்றாய் அழகியதே வதையாயே மண்மீதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சமில்லை அச்சமில்லை

எதுவரினும் அஞ்சா தெழுந்து எதிர்ப்போம்
அதுவாக எம்மை நினைத்து பயம்கொள்ளும்
வண்ணமாய் பாரிலே நாம்

பயந்து பயந்து விழித்தே உறங்கும்
துயரத்தை தூரமாக்கி நெஞ்சில் உரம்பெற்
றயர்வின்றி அஞ்சா தெழு

உலகமே சேர்ந்து திரண்டுடெழுந் தாலும்
கலைகம்வந் தாலும் கலங்காத தீரம்
கவசமாய்க் கொண்டே நிமிர்

பாட்டனான பாரதி காட்டிய நேர்வழியில்
நீட்டமாய்ப் பாய்ந்துசீறும் ஆறாக வீறுகொண்டே
பாரினை வென்றிட வா

அச்சமெல்லாம் அஞ்சுமே எம்முன் வருகையில்
துச்சமாய் வீழ்த்தியே அச்சத்தை தள்ளினால்
விஞ்சிடலாம் விண்தாண் டியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெத்தப்படித்தவன்

நினைவிலே நானும் உலகில் அறிஞர்
அனைத்தும் அறிந்தவர் என்று திரிவார்
எதுவும் அறியார் அவர்

பிழைபிழையாய் கூறி தவறாய் நடத்தி
அழையாமல் உட்சென்று துன்பத்தை செய்வார்
களைபோ லிருப்பா ரவர்

பிழைசுட்டும் போது அதட்டுகையில் உறுக்கி
உழைக்கின்ற வர்க்கத்தை வீழ்த்த முயன்றே
இழைக்கும் தவறறி யார்

எப்போதும் இவ்வாறே இங்கிதம் இல்லாதே
தப்பில் மயங்கிக் கிடப்பார் தவறினை
அப்பர் கூறினும்கே ளார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசாரம்

நாட்டுக்கு நாடு பழக்கமும் வேறுபடும்
வீட்டுக்கு வீடு சிநேகம் வளரும்
மனிதரெல்லாம் சீராய் நிமிர்ந்தே நிறைந்து
கனிவாக வாழும் சிறப்பு

வந்திக்கும் தெய்வமும் கல்வியும் ஆடையும்
இந்தத் திரவியமும் மாறுபடும் ஆவிமட்டும்
சிந்தித் தெழும்வழி யால்மட்டும் ஒன்றுபடும்
முந்தைய ஓம்புத லால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பு

தடுப்பு இருந்தாலே வேகத்தைக் கூட்டி
துடுப்பாய் அதுவே நகர்த்துகின்ற உண்மை
அறியார் அடுத்தவரை வீழ்த்த முயன்று
வறியாராய்ப் போகின் றனர்

விடுப்பின்றி நில்லா துழைக்கும் மனிதர்
சடுகுடு வேகத்தில் முன்னேறி பாரில்
உயர்ந்தே பிறரையும் வாழவைக்க நாளும்
அயராதே பாடுபடு வார்

தானும் உயர்ந்து தமரையும் முன்னேற்றி
ஊனும் உதிரமும் போலே பிரியாது
ஈடில்லா வாழ்வில் இணைந்து களிக்கின்ற
கேடிலாரை போற்று முலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடலும் காற்றும் காலமும் உள்ளவரை
உடலும் உயிரும் உள்ளமும் நேசிக்கும்
கவிதை கவிதை கவிதை என்றே
புவியில் நித்தமும் புதிய யுத்தம்
புரியும் ஆத்மா புதுமை படைக்க.



9 786249 890923

மெகா பதிப்பகம் 021 221 7939

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org